# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

## விளையாட்டு விடுதிகளில் மாணவ / மாணவியர் சேர்க்கை

## செய்திக் குறிப்பு

விளையாட்டு மேம்பாடு மற்றும் இளைஞர் நலத்துறையின் மூலமாக பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப நல்ல பயிற்சி மற்றும் தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய 28 விளையாட்டு விடுதிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் 2016–2017ம் வருடத்தில் மாணவ / மாணவியர்களுக்கான சேர்க்கை நடைபெற்றுவருகிறது

விளையாட்டு விடுதிக்கான இரண்டாம் கட்ட தேர்வுப்போட்டிகள் கீழ்கண்ட விதிமுறைகளின் படி நடைபெற உள்ளது.

1. தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வென்றவர்கள்
2. தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள்
3. மாநில அளவிலானப் போட்டியில் முதல் 3 இடங்களில் பதக்கம் பெற்றவர்கள்
4. மாநில அளவிலானப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் மற்றும் தகுதி வாய்ந்த வீரர்/வீராங்கணையர்

மேற்கண்ட தகுதிகள் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்/வீராங்கனைகளுக்கான இரண்டாம் கட்ட மாநில அளவிலானத் தேர்வுகள் வரும் 17.06.2016, 18.06.2016 மற்றும் 19.06.2016 ஆகிய தேதிகளில் சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டரங்கம் ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது.

**<u>தேர்வுப் போட்டிகள் நடைபெறும் விபரம்</u>**

| வ.எண். | விளையாட்டுக்கள் | மாநிலத்தேர்வு நடைபெறும் இடம் | தேதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| 01. | தடகளம் | நேரு விளையாட்டரங்கம், சென்னை | 7th 8th மற்றும் 9th படிக்கும் மாணவ/மாணவிகளுக்கு **17.06.2016** அன்று காலை 8. 00 A.M முதல் தேர்வு நடைபெற உள்ளது.<br>**18.06.2016** அன்று 11th படிக்கும் மாணவர்களுக்கும் **19.06.2016** அன்று 11th படிக்கும் மாணவிகளுக்கும் காலை 8. 00 A.M முதல் தேர்வு நடைபெற உள்ளது. |
| 02. | கூடைப்பந்து | | |
| 03. | பேட்மிண்டன் | | |
| 04. | குத்துச்சண்டை | | |
| 05. | கால்பந்து | | |
| 06. | கத்திச்சண்டை | | |
| 07. | ஜிம்னாஷ்டிக்ஸ் | | |
| 08. | மேசைப்பந்து | | |
| 09. | டென்னிஸ் | | |
| 10. | ஜூடோ | | |
| 11. | கபாடி | மாவட்ட விளையாட்டரங்கம், திருவண்ணாமலை. | 7th 8th மற்றும் 9th படிக்கும் மாணவ/மாணவிகளுக்கு **17.06.2016** அன்று காலை 8. 00 A.M முதல் தேர்வு நடைபெற உள்ளது.<br>**18.06.2016** அன்று 11th படிக்கும் மாணவர்களுக்கும் **19.06.2016** அன்று 11th படிக்கும் மாணவிகளுக்கும் காலை 8. 00 A.M முதல் தேர்வு நடைபெற உள்ளது. |
| 12. | கைப்பந்து | | |
| 13. | வளைகோல்பந்து | | |
| 14. | நீச்சல் | | |
| 15. | கையுந்துபந்து | | |
| 16. | பளுதூக்குதல் | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுப்பட்டியலின்படி தேர்வு காலை 8. 00 A.M. முதல் தேர்வு நடைபெற உள்ளது.

மேற்காணும் விளையாட்டுக்களில் நடைபெறும் மாநில அளவிலான இரண்டாம் கட்டத்தேர்வில் பங்கேற்றிடும் மாணவ / மாணவியர்கள் அதற்கான விண்ணப்பத்தினை www.sdat.tn.gov.in எனும் இவ்வாணையத்தின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் விளையாட்டில் பங்கேற்ற அசல் சான்றுகளுடன் மேற்குறிப்பிட்ட தேதிகளில் காலை 8.00 மணி அளவில் மேற்படி உரிய மையங்களில் நேரில் ஆஜராக வேண்டும்.

தகுதி வாய்ந்த விளையாட்டு வீரர்/வீராங்கணைகளுக்கு நேரிடையானத் தேர்வு நடைபெற்று விளையாட்டு விடுதியில் சேருவதற்கான அனுமதி வழங்கப்படும் என தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. பிரதீப் யாதல் இ,ஆ,ப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்.**